இந்தப் புனித வாரம் இயேசுவோடு நாம் தனித்திருந்து தியானிக்க கடவுளால் கொடுக்கப்பட்ட ஒரு கொடை.



*Published by:*
Peninsular Malaysia
Pastoral Team

*Email:* api@archkl.org

**INTERNAL CIRCULATION ONLY**

BUL 14/2023

இந்தப் புனிதவாரத்தின் ஒவ்வொருநாளும், நமக்கென நேரத்தையும் இடத்தையும் ஒதுக்கிக்கொள்வதற்கும் இது ஒரு பயனுள்ள காலம். இந்த வாரத்தின் அன்றாட விவிலிய வாசகங்களை அமைதியான நேரத்தைத் தேர்ந்தெடுத்து அதை வாசித்து, இறைவேண்டலுக்குப் பயன்படுத்திடவும் இயேசுவோடு வழிநடந்து, நம்மிடமிருந்து அவர் விரும்புவது என்பதைப் பற்றி அவர் நம்மிடம் பேச அனுமதிக்கவும், முன்வருவோம். இதுபோன்ற செயல்களை செய்வதற்குத் தடையாக இருக்கும் அனைத்தையும் நம்மிடமிருந்து விலக்கிவிடுவோம்.

ஆயர் மன்றத்திற்கான இறைவேண்டல், இந்தப் புனித வாரத்தை மேலும் அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கான ஒரு வாய்ப்பு. இறைவேண்டலின் ஒவ்வொரு வரியையும், ஒவ்வொரு நாளில் தியானித்து பயனுள்ள தியானமாக்குங்கள்.

## ஆயர் மாமன்ற இறைவேண்டல்

தூய ஆவியாரே,
உமது திருப்பெயரில் கூடியுள்ள நாங்கள்
இதோ, உமது திருமுன் நிற்கின்றோம்!

நீர் ஒருவர் மட்டுமே எங்களை வழிநடத்தக்கூடியவர்.
எம் இதயங்களை நீர் வாழும் இல்லங்களாக மாற்றும்.
நாங்கள் எவ்வழியில் பயணிக்கவேண்டும் என்பதையும்
அவ்வழியில் எவ்வாறு தொடர்ந்து பயணிக்கவேண்டும்
என்பதையும் எங்களுக்குக் கற்றுத் தாரும்.

நாங்கள் பலவீனர்கள், குற்றமுள்ளவர்கள்.
ஒழுங்கின்மையை ஏற்படுத்தாதவாறு எங்களைக் காத்தருளும்.
எங்கள் அறியாமையால் தவறான வழிகளில் செல்லாதவாறும்,
பாகுபாடுகள் எங்கள் செயல்களை மேற்கொள்ளாதவாறும்
தொடர்ந்து எங்களைக் காத்தருளும்.

உம்மிலே எம் ஒற்றுமையைக் கண்டு
உண்மையானதும், சரியானதுமான
பாதையிலிருந்து விலகாமல்
நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து
நிலைவாழ்வை நோக்கிப் பயணிப்போமாக!

இந்த எம் மன்றாட்டுகளையெல்லாம்
தந்தையாம் இறைவனோடும், திருமகனாம் இயேசுவோடும்
என்றென்றும் ஒன்றிணைந்து எந்நாளும் எவ்விடத்திலும்
செயலாற்றும் உம்மை மன்றாடுகின்றோம்.
ஆமென்.

1 & 2 ஏப்ரல் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்: **வாழ்வின் புதுமைத்தன்மை**

நிகழ்வின் நோக்கம்: **தவக்காலம் & ஈஸ்டர் காலம்**

**இந்தப் புனித வாரம் இயேசுவோடு நாம் தனித்திருந்து தியானிக்க கடவுளால் கொடுக்கப்பட்ட ஒரு கொடை.** உண்ணாநோன்பு, இறைவேண்டல், தர்மகாரியங்களின் வழியாக, தேவையில்லாதவற்றைக் குறைத்துக்கொண்டு இயேசுவுடன் அதிக நேரம் பயன்படுத்த இந்த வாரம் அமைந்துள்ளது. இதுபோன்ற செயல்களைத் தனித்தோ, குடும்பமாகவோ, அல்லது நம்மோடு பணி செய்பவர்களோடு, நம் பங்குப் பணிக்குழுக்களோடு இதை நாம் செய்யலாம்.

